கொடுக்க முடியாமல், சொந்தமாக வெல்லம் தயாரித்தால், அதற்கு ஹைட்ரோ சல்பேட்டிற்கு 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை ஆகிறது. எனவே, இதையும் குறைப்பதற்கு வழி செய்ய முடியுமா ? என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசுதான் மாநிலத்திற்கு மாநிலம் கரும்பினுடைய குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் இந்த விலை மாறுபடுகிறது. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச விலை ரூ. 73.70. இதற்குக் குறைந்து ஆலைச் சொந்தக்காரர்கள் வாங்கக் கூடாது என்பது சட்டம். ஆனால், அப்படி வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மேற்கொண்டு மத்திய அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, குறைந்த பட்ச விலை ரூ. 73.70 என்று சொல்லப்படுகிறது. மதுரை மாவட்டத்தில், அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரை கொடுக்கிறார்கள். இதை உயர்த்திக்கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் சொல்லியபடி, சில ஆலைகளில் குறைவாகக் கொடுக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு தகவல் வரவில்லை. அப்படி வந்தால் கவனிக்கலாம். சேலம் கோவாப்பரேட்டிவ் ஷுகர் மில்லில் 90 ரூபாய் ; நார்த் ஆர்க்காட் கோவாப்பரேட்டிவ் ஷுகர் மில்லில் 90 ரூபாய். குறைவாக வாங்குகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். அதுபற்றி அரசாங்கத்திற்கு எந்தவிதமான புகாரும் இல்லை. ஏற்கெனவே, ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 12—6—1969-ல் இறுதியாகக் கூட்டம் கூட்டப்பட்டு, குறைந்தபட்ச விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 73.70 என்று அதைத்தான் ஒத்துக்கொண்டார்கள். ரூ. 76 என்பதைக் கூட ஒத்துக்கொள்ளக் கூடாது என்ற அளவில் பரிசீலனை செய்யப்பட்டு, யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, அப்படிக் குறைந்தபட்ச விலையில் எடுக்கப்பட்டதாக எந்தவிதப் புகாரும் இல்லை.

Milk production

*205 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the Commissioner for Milk Production, Madras is preparing a Master plan for stepping up milk production in an organised way in the districts of Thanjavur and Tiruchirappalli?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர் மாவட்டத்திற்காக மட்டுமே பால் பெருக்க-கால்நடை மேம்பாட்டு ஆணையாளர் பால்பண்ணைச் செயல்முறைத் திட்டம் ஒன்றைத்

தற்போது தயாரித்து வருகிறார். மாநில அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், தமிழ்நாடு முழுவதிலும் தற்போது செயலிலுள்ள பால்வழங்கு முறையை ஆராய்வதற்காகவும் மாநிலம் முழுவதற்குமாகப் பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காகவும் தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியம், வல்லுநர்கள் குழு ஒன்றை அனுப்பியுள்ளது. இம் மாநிலத்தில் பால் வழங்குமுறை பற்றிய பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியம் செய்யும் ஆய்வின்கீழ் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும் வரும்.

THIRU K. VINAYAKAM : May I know whether the milk produced in Thanjavur and Tiruchirappalli will be made available for sale only in those districts or will it be sent to Madras to make good the deficit supply in the City of Madras?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேசியப் பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. அதற்குப் பிறகுதான் எதைப்பற்றியும் சொல்ல முடியும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், தஞ்சை ஜில்லாவிலே தேசீயத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பால் அபிவிருத்தித் திட்டம் மத்திய சர்க்காரால் ஆரம்பிக்கப்படுகிறதா? அல்லது மாநில அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படுகிறதா? அப்படியென்றால் எத்தனை கோடி ரூபாய் அளவில் பூர்வாங்க ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது மாநில சர்க்காரின் திட்டம்தான். தேசியப் பால்பண்ணையின் உதவியைக் கேட்டிருக்கிறோம். நிபுணர் குழு பரிசீலித்து அறிக்கையை இன்னும் அனுப்பாமல் இருக்கிறார்கள். அறிக்கை வந்தபிறகு முடிவு செய்யப்படும்.

Inspection of check-posts

*206 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleaesd to state—

(*a*) whether suprise inspection of check-posts has been made by the Hon'ble the Minister at various places about the 21st June, 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 18—6—1969 தேதி அன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள சிங்காரபட்டியில் அமைந்திருக்கும் மாவட்டங்களுக்கிடையிலுள்ள சோதனைச் சாவடியிலும், பொம்மாண்டபள்ளி, ஹோசூர், பகலூர் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் மாநிலங்களுக்கிடையிலுள்ள சோதனைச் சாவடிகளிலும் திடீர் ஆய்வு செய்யப்பட்டது.